# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண்: 158/மா/2017**
**ஆணை நாள்: 20–12–2018**

திரு. M. செந்தமிழ் செல்வம்,
தஞ்சாவூர். --- முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
தஞ்சாவூர் மாநகராட்சி,
தஞ்சாவூர். --- எதிர்மனுதாரர்

தஞ்சாவூர் மாநகராட்சி, கரந்தை, இமார்த்தி கொத்தன் தெரு, எண்.12/656 என்ற முகவரியில் வசிக்கும் திரு. எம். செந்தமிழ் செல்வம் என்பவரது 18/07/2017 தேதியிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21/07/2017 அன்று பெறப்பெற்று, முறையீட்டு மனு எண்.158/2017 என எண்ணிடப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

திரு. எம். செந்தமிழ் செல்வம், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் அன்னார் தஞ்சாவூர் மாநகராட்சியில் குழாய் திறப்பாளராக பணிபுரிந்து 30.04.2012ல் வயது முதிர்வு காரணமாக பணி ஓய்வு பெற்றதாகவும், தனக்கு அரசாணை நிலை எண்.338 நிதி (ஊதியப் பிரிவு) நாள் 26.08.2010ன்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவைத் தொகை மற்றும் திருத்தப்பட்ட ஓய்வூதியம் நிலுவைத் தொகை வழங்கவும், தன்னுடன் குழாய் திறப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. எம். சுப்பிரமணியன் என்பவருக்கு மேற்படி அரசாணையின்படி ஊதியம் திருத்தி அமைக்கப்பட்டு அதற்கான பணப்பயன்கள் வழங்கப்பட்டு, திருத்திய ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டு அதற்கான பணப்பயன்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு 26.7.2017 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது.

ஆணையர் மற்றும் தனி அலுவலர், தஞ்சாவூர் மாநகராட்சி தனது 28.08.2017 தேதியிட்ட அறிக்கையில், தஞ்சாவூர் மாநகராட்சியில் பொறியியல் குடிநீர் வழங்கல் பிரிவில் குழாய் திறப்பாளராக பணிபுரிந்து கடந்த 30.04.2012ல் வயது முதிர்வின் காரணமாக பணி ஒய்வு பெற்ற திரு. எம். செந்தமிழ் செல்வம் என்பவர் தனக்கு அரசாணை நிலை எண்.338 நிதித் துறை (ஊதியப் பிரிவு) நாள் 26.08.2010ன்படி திருத்தப்பட்ட ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவைத் தொகை 01.08.2010 முதல் பணி ஒய்வு பெற்ற 30.04.2012 வரை வழங்கப்படவில்லை எனவும், மேலும் திருத்தப்பட்ட ஊதியத்தின்படி ஓய்வூதியப் பிரேரணை அனுப்பி வைத்திடவும் கோரியிருந்தார் என்றும் இப்பொருள் தொடர்பாக பணியாளரின் பணிப் பதிவேடு மற்றும் தொடர்புடைய கோப்புகள் உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை (உடன் நிகழ் தணிக்கை பிரிவு) தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டதில் உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை உடன் நிகழ்வு தணிக்கைபிரிவு, தஞ்சாவூர் தனது 18.08.2017 தேதியிட்ட கடிதத்தில் மனுதாரருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, நகராட்சிகள் ஓய்வூதியப் பிரிவு. சென்னை அவர்களால் P.P.O.No.23999, நாள்: 27.09.2012ன்படி ஓய்வூதியம் அனுமதிகப்பட்டுள்ளதால், அன்னார் கோரியுள்ளவாறு ஒரு நபர் குழு ஊதியம் அடிப்படையில் ஓய்வூதியம் திருத்தம் அல்லது நிலுவைகள் வழங்குவது தொடர்பாக இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை சென்னை அவர்களிடம் நேரடியாக அணுகி பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே தனியருக்கு திருத்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கிட ஏதுவாக இம்மாநகராட்சி ஓய்வூதியப் பிரிவில் இருந்து அன்னாருக்கு திருத்திய ஓய்வூதிய பிரேரணை அனுப்பி வைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தில் 26.07.2017 தேதியிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் 31.08.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் தான் 30.04.2012ல் குழாய் திறப்பாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றதாகவும், காவலர் பணியில் தான் ஒய்வூதியம் வழங்கினார்கள் என்றும் தனக்கு அரசாணை எண்.338 நாள்:26.8.2010ன்படி ஒரு நபர் குழு பரிந்துரையின்படி ஆணையர் தஞ்சாவூர் நகராட்சி அவர்களால் தான் ஓய்வு பெற்றபின் தஞ்சாவூர் நகராட்சி தனது 14.8.2013 நாளிட்ட ஆணையின்படி குழாய் திறப்பாளர் பணியில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டது என்றும் ஆனால் பயன்கள் ஏதும் வழங்கவில்லை என்றும், இது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.45529/எப்.3/2010 நாள்:21.5.2015ல் தெளிவுரை வழங்கப்பட்டது என்றும், தன்னுடன் பணியாற்றி தனக்கு பின்பு குழாய் திறப்பாளராக ஓய்வுபெற்ற திரு. எம். சுப்பிரமணியம் என்பவருக்கு திருத்திய ஓய்வூதிய பணப்பயன்கள் வழங்கப்பட்டது என்றும், பலமுறை விண்ணப்பித்தும் உள்நோக்கத்துடன் வேண்டுமென்றே தாமதம் செய்கிறார்கள் என்றும், இதற்கு சம்மந்தப்பட்ட திரு. சீனிவாசன் என்ற பொறியாளரும் மற்றும் இ2 எழுத்தர் என்ற குமரன் என்பவரும் உள்நோக்கத்துடன் தாமதம் செய்கிறார்கள் என்றும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலம், தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலரின் அறிக்கை ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டதில் மனுதாரர் பணி ஓய்வு பெற்று 6 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் தெளிவுரை வழங்கிய பின்பும் மனுதாரக்குரிய திருத்திய ஓய்வூதிய பணப் பயன்களை வழங்காமல் இருந்து வருவது ஏற்புடையதல்ல. மனுதாரருக்கு பிறகு ஓய்வு பெற்ற பணியாளருக்கு திருத்திய ஓய்வூதிய பயன்கள் வழங்கியிருப்பது எவ்வாறு என்பது தெரியவில்லை. மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் மனுதாரருக்கு திருத்திய ஓய்வூதியம் வழங்கிட ஏதுவாக மாநகராட்சி ஓய்வூதிய பிரிவில் இருந்து திருத்திய ஓய்வூதிய பிரேரணை அனுப்பி வைத்திட உரிய நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவித்திருப்பது பயனுள்ள நடவடிக்கையாகாது என இம்முறைமன்ற நடுவம் பதிவு செய்யவிரும்புகிறது. அனைத்து பணியாளர்களையும் சமமாக நடத்துவது அவசியம். தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் உடன் விரைவான நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரருக்குரிய திருத்திய ஓய்வூதிய பணப்பயன்களை விதிகளின்படி விரைந்து வழங்கிட அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும் மனுதாரருக்கு பின்பு பணி ஓய்வு பெற்ற பணியாளருக்கு திருத்திய ஓய்வூதிய பணப்பயன்கள் வழங்கப்பட்டு மனுதாரருக்கு வழங்காமல் காலதாமதம் செய்த சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை விபரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் அறிக்கையாக 30 தினங்களில் சமர்ப்பிக்க தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

18/1/2019

செயலாளர்.

பெறுநர்

1. திரு. M. செந்தமிழ் செல்வன்,
   12/656, இமானுத்தி கொத்தன் தெரு,
   கரந்தை, தஞ்சாவூர் - 613 002.
2. ஆணையர்,
   தஞ்சாவூர் மாநகராட்சி,
   தஞ்சாவூர் - 613 005.

**நகல்**

**முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**செயலாளரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு 3, இ. கோ. / உதரி**